# UNIVERSITY HOSPITAL
# GENERAL SIR JOHN KOTELAWALA DEFENCE UNIVERSITY

## VACANCIES

**General Sir John Kotelawala Defence University Hospital calls applications from qualified candidates / individuals for the following post:**
**(Full Time - Contract Basis)**

1. **வைத்திய நிபுணர் தீவிரசிகிச்சை**

**தகைமைகள்**

I. 2018 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் இலங்கை மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட/பதிவுசெய்யப்படக்கூடிய வைத்திய அதிகாரிகள் மற்றும் பல் வைத்தியர்கள்.

OR

II. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரிகள்/ பல் மருத்துவர்கள்

OR

III. இலங்கை, கொழும்பு பல்கலைக் கழக மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவக சபையினால் சான்றிதழிக்கப்பட்டதாக குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவத்தில் டாக்டர் பட்டம்/ சத்திரசிகிச்சையில் டாக்டர் பட்டம் பெற்றிருத்தல் ( இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 திகதிய இல:1883/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட)

அத்துடன்

IV. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**வயதெல்லை:**

30 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**

MC 1-2-Rs (91,645 – 12 x 2,700 - 124,045)
* தரம் I வைத்திய நிபுணர்கள் MC 1-2 இன் முதலாம் படி நிலையில் வைக்கப்படுவர்.

**பொது நிபந்தனைகள்:**

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் அத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை பதவிக்குரித்தான கடமைகளை புரியும் பொருட்டு உடல் உள வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

V. வைத்தியபீடத்தின் பீடாதிபதி மற்றும் இணைந்த சுகாதார பீடத்தின் பீடாதிபதி ஆகியோர்களின் மேற்பார்வையின் கீழ் வைத்தியபீட மற்றும் இணைந்த சுகாதார பீட மாணவர்களுக்கு கற்பிப்பதற்கும் பயிற்சியளிப்பதற்கும் மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுத்தப்படலாம்.

VI. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10 % பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் 15 % ஊழியர் சேமலாப நிதியும் (EPF), 10 % ஊழியர் நம்பிக்கை நிதியும் (ETF) பல்கலைக் கழகத்தினால் பங்களிப்புச் செய்யப்படும்.

VII. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு “ நிறைவேற்றுப் பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்லாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, வேரஹெர” என்ற முகவரிக்கு 2023.12.27 முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுத்ல வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல வேண்டும்.

VIII. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

IX. சரியாக பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற்கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

X. விண்ணப்பம் மற்றும் ஏனைய தகவல்களை கொபாப வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**www.kdu.ac.lk**